சார்பு நீதிமன்றம், திருவாரூர்.

முன்னிலை திரு. M. முருகன், M.L.,

சார்பு நீதிபதி, திருவாரூர்.

<u>அசல் வழக்கு எண்.125/2020</u>

14.10.2025

வா.சா.1 திரு.செல்லதுரை, த/பெ. தங்கவேல்

**<u>1, 2, 3, 5 பிரதிவாதிகள் தரப்பு குறுக்கு விசாரணை</u>**

எனக்கு நீதிமன்றத்திலிருந்து சாட்சியமளிக்க சம்மன் வரவில்லை என்றால் சரிதான். என்னை சாட்சி சொல்ல சேகர் அழைத்துவந்தார். என்னிடம் காட்டப்படும் முதல்விசாரணை வாக்குமூலத்தில் உள்ள கையெழுத்து என்னுடையதுதான். முதல்விசாரணை வாக்குமூலத்தில் என்ன எழுதப்பட்டுள்ளது என்று படித்துபார்த்தேன். முதல்விசாரணையில் சொல்லியுள்ள சங்கதிகளை சேகர்தான் சொன்னார் என்றால் சரியல்ல. அசல் வழக்கை சேகர் தாக்கல் செய்துள்ளார். சேகர், ராமு மகன் ரவிசங்கர் மீது வழக்கு தாக்கல் செய்துள்ளார். வாதி பிரதிவாதிகளை சுமார் 50 வருடங்களாக தெரியுமா என்றால் தெரியும். வாதிகளுக்கும் 1 முதல் 3 பிரதிவாதிகளுக்கும் என்ன உறவுமுறை என்றால் மாமா, மச்சான் உறவாகும். நான் 30, 40 வருடங்களாக கிராம நாட்டாண்மையாக இருந்து வருகிறேன். தற்போது என்னுடன் சோமு, பன்னீர் ஆகியோர்களும் நாட்டாண்மையாக உள்ளார்கள். தாவா சொத்தின் பட்டா எண் தெரியாது. புல எண் 3/17 ஆகும். தாவா சொத்தின் விஸ்தீரணம் சுமார் 150 குழியிருக்கும். தாவா சொத்து யாருக்கு உரிமையானது என்றால் சேகரின் முன்னோருக்கு கிராமம் சார்பாக கொடுக்கப்பட்ட சொத்தாகும். தாவா சொத்து கிராம சமுதாயத்துக்கு பாத்தியப்பட்டது. தாவா சொத்தில் எனக்கு தெரிந்தவரை சேகரின் மூதாதையர்களும் தற்போது சேகரும் இருந்துவருகிறார்கள். கிராமம் சார்பாக சேகருக்கு ஆவணம் எழுதிக்கொடுத்துள்ளோமா என்றால் நாங்கள் கொடுக்கவில்லை. முன்பு இருந்த 62 நபர்கள் சேர்ந்து எழுதிக்கொடுத்துள்ளார்கள். கண்ணுசாமி இறந்து 15, 20 வருடங்கள் இருக்கும். கண்ணுசாமியின் மனைவி பெயர் தெரியுமா என்றால் தெரியாது. பிரதிவாதிகளின் தந்தை ராமசாமியை தெரியும். ராமசாமி மனைவி பெயர் தெரியாது. ராமசாமி எங்கள் ஊரைச்சேர்ந்த பெண்ணை தான் திருமணம் செய்தார். கண்ணுசாமியும், ராமசாமியும் மாமா, மைத்துனர் உறவு முறையை கொண்டவர்கள் ஆவார்கள். தாவா சொத்தில் பிரதிவாதிகள் நிரந்தரமாக வீடு கட்டி வசித்து வருகிறார்கள் என்றால் தெரியாது. தாவா சொத்தில் சேகரும்

அவரது அண்ணனும் வசித்து வருகிறார்கள். முதல்விசாரணை வாக்குமூலத்தில் பிரதிவாதிகள் வீடு கட்டி குடியிருந்து வருவதாக சொல்லியுள்ளேன் என்றால் இல்லை. 1 முதல் 3 பிரதிவாதிகளுக்கு தாவா சொத்தை பொறுத்து கிராம நாட்டாண்மைகள் விடுதலை பத்திரம் எழுதிக்கொடுத்துள்ளார்கள் என்றால் எனக்கு அதை பற்றி தெரியாது. விஷ்ணுபுரம் என்ற கிராமம் தெரியுமா என்றால் தெரியும். விஷ்ணுபுரத்தில் பள்ளிக்கூடம் உள்ளது என்றால் சரிதான். நான் தேதியூர் கிராமத்தில் பிறந்தது முதல் வசிக்கிறேன். விஷ்ணுபுரத்தில் உள்ள பள்ளிக்கூடத்தில் ராமசாமி படித்த விவரம் தெரியுமா என்றால் தெரியாது. தாவா சொத்து சம்பந்தமாக நான் கிராம நாட்டாண்மை என்ற அடிப்படையில் பஞ்சாயத்து பேசியுள்ளேனா என்றால் இல்லை. காவல்நிலையத்திற்கு சென்று சாட்சியமளித்துள்ளேனா என்றால் இல்லை. தாவா சொத்திற்கு நான்கெல்லை தெரியாது. தாவா புல எண் கொண்ட சொத்தில் எத்தனை வீடுகள் உள்ளது எத்தனை மின்இணைப்பு உள்ளது என்று தெரியுமா என்றால் தெரியாது. தாவா சொத்தில் 1 முதல் 3, 5, 6 பிரதிவாதிகள் நிரந்தரமாக வசித்து வரும் விவரம் தெரியும் என்றாலும் வழக்கிற்காக பொய்சொல்கிறேன் என்றாலும் சரியல்ல. வாதி என்ன பரிகாரம் கேட்டுள்ளார் என்ற விவரம் தெரியுமா என்றால் இடம் அவர்களுக்கு சொந்தம் என்று வழக்கு போட்டுள்ளார்.

**4 ஆம் பிரதிவாதி தரப்பு குறுக்கு விசாரணை**

தாவா சொத்தில் கூரை வீடும், ஆர்சிசி வீடும் உள்ளது என்றால் சரிதான். ஆனால் எந்த வீட்டில் மின் இணைப்பு உள்ளது என்ற விவரம் எனக்கு தெரியாது.

Typed down to my dictation, In my presence and hearing and under my personnel direction and Superintendence and admitted by the witness to be Correct.

Sd/ M. Murugan
Subordinate Judge,
Tiruvarur.